[1974 சனவரி 23

மதுரையில் குடிசைப்பகுதி மாற்றுத் திட்டம்

* 116 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரூ. 6 கோடி செலவில் சேரி ஒழிப்புத் திட்டம் ஒன்றினை மதுரை மாநகராட்சி தயாரித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த மாதிரி ஸ்லம் க்ளியரன்ஸ் ஸ்கீம் சென்னையிலே இருக்கிறது. அதற்கு அடுத்த பெரிய கார்ப்பரேஷனாக இருக்கும் மதுரையிலேயும் இப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டுவரும் ஆலோசனை அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சென்னையிலே குடிசை மாற்று வாரியம் செய்யும் வேலைகளை வீட்டு வசதி வாரியம் மாவட்ட தலைநகரங்களிலே செய்து வருகிறது. அந்த அடிப்படையில் 65.82 லட்சத்தில் இப்பொழுது மதுரைக்காக திட்டங்கள் போடப்பட்டு வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன.

Supply of diesel oil

* 117 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken by the Government to increase the supply of diesel oil in this State ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்சமயம் டீசல் எண்ணெய் கிடைப்பதில் தட்டுப்பாடு எதுவும் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, டீசல் சப்ளையை அதிகரிக்காவிட்டாலும் அது குறையாமல் இருக்கவாவது மத்திய சர்க்கார் உறுதி கொடுத்திருக்கிறார்களா ? அல்லது இந்த சப்ளை குறையாமல் இருக்க சர்க்கார் ரேஷன் முறையைக் கொண்டுவருவதற்கு உத்தேசித்திருக்கிறதா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1974 சனவரி 23]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாநிலத்தினுடைய தேவை அதிகரிக்கும்பொழுது மத்திய அரசுக்கு நாம் இது சம்பந்தமாக எழுதி அந்தத் தேவையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். மத்திய அரசு நமக்கு எந்த உத்தரவாதமும் அளிக்க முடியாது. ஏனென்றால் மத்திய அரசுக்கே மற்ற நாடுகளிலேயுள்ள சர்க்கார்கள் உத்தரவாதம் அளிக்க முடியாத நிலைமை இந்த பெட்ரோலியம் பொருட்களிலே இருப்பதால் அவர்கள் நமக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கூறுவது நியாயமாகாது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் பேருந்துகளில் பணியாற்றியோர்

*118 வினா—திரு. எ. சுவாமிதாஸ்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்த வழித் தடங்களை அரசு போக்குவரத்துத்துறை எற்றெடுத்து தேசியமாக்கிய பின்னர், அதன் காரணமாக வேலை யிழந்தவர்களுள் எத்தனை பேர் வேலை கேட்டு விண்ணப்பித்துள்ளனர்?

(இ) அவர்களுக்கு எப்போது வேலையளிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 61 பேர்கள் வேலைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

(இ) அதில் 36 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. எ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, எஞ்சியுள்ளவர்களுக்கும் வேலை அளிக்க அரசு முற்படுமா? தனியார் துறை போக்குவரத்துத் துறையில் பணியாற்றி அரசுத் துறையில் பணியாற்ற வருபவர்களுக்கும் அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு ஓய்வுகால ஊதியமும், மற்ற சலுகைகளும் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 61 பேர்களில் 51 பேர்கள்தான் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு வந்தார்கள். அவர்களில் 15 பேர்கள் தாங்கள் தனியார் நிறுவனங்களில் வேலை செய்தவர்கள் என்று நிரூபிக்க முடியாமல் போனதால் அவர்களை எடுக்க முடியவில்லை. ஆகவே 36 பேர்கள்தான்